14962.

உ

சிவகணபதி துணை.

# முத்திசோபானம்.

இஃது

சென்னைபுரியில்

1911-ளு டிஸம்பர்மீ நடைபெற்ற

சைவசித்தாந்த மஹாசமாஜத்துக்கு

மேற்படி சமாஜ காரியதரிசி

ஸ்ரீமஸ்ரீ இ. ஆதிமூல முதலியாரவர்கள்

விரும்பியவண்ணம்

தில்லைவளாக மடாலயவாசி,

திருச்செந்தூர்

ஆநந்த ஷண்முக சரணாலய சுவாமி

சமர்ப்பித்த வியாசம்.

திருவாரூர்:

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்"

மானேஜர் T. B. ரெங்கசாமிப்பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

1911-ளு டிசம்பர்மீ 24உ.

௨

# குருஸ்துதி.

ஆகமனஞ் சீவனெனு மவைமூன்றிற் றரும
மாறாகும் வினையகற்று மரும்பகவனாகிச்
சேகறுமுக் கரணமுடன் வந்தனைசெய்வோர்க்குத்
திருக்கருணை காட்டிமலத் திரையாதி நீக்கி
கோகனகத்தாளான கோயிலர சளித்துக்
கும்போதயற்குமுரை கூறியெனை யாளக்
கேகயப்புள்ளாரசேறிச் செந்திநகரெழுந்த
இரணவடிவேலனிரு சரணமலர்ப் பணிவாம்.

உ

சிவகணபதி துணை.

திருச்செந்திநாதன் றுணை.

# முத்திசோபானம்.

திருச்சிற்றம்பலம்.

## சிவஞானசித்தியார்.

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாதமார்க்க மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்னும் நால்வகை நெறியிற் பிறப்பவையாவை? அவையெல்லாம் பசுக்கள்; அவ்வாறு பிறத்தலில்லாதது யாது? அது பதிப்பொருள்; என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்குந் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால் வேதாகம புராணேதிகாச முதலிய நூல்களிலே மற்றைத்தேவர்களெல்லாம் அவ்வாறு பிறந்திறத்தல்சொல்லப்படுதலாலும், சிவபெருமானுக்குஅது உண்டென்பது சொல்லப்படாமையாலும் அவரே முழுமுதற்கடவுளெனத் துணியப்படும். அத்தகைய சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரதை, அலுப்தசத்தி, அநந்தசத்தி என்னும் அறுகுணங்களையும்; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் இயல்பாகவேயுடைய

அநாதிமல முத்தபதியாகிய சிவபெருமான் அநாதிமல பெத்த பசுவாகிய ஆன்மாக்களின் மேல்வைத்த பெருங் கருணையினாலே அவைகளுக்குப் பசுத்துவநீக்கமும் சிவத்துவ விளக்கமும் சித்தித்தற்பொருட்டு தமது ஊர்த்துவ முகமாகிய ஈசான முகத்தினின்றும் காமிகாதி இருபத்தெட்டாகமங்களையும்; ஏனை தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் நான்கு முகங்களினின்றும் இருக்காதி நான்கு வேதங்களையும் முதனூலாக அருளிச்செய்தனரென்று காமிகாகமாதிகளிலும் கந்தபுராண ஈசசங்கிதையின்கணுள்ள * ஆலாசியமான்மியம் முதலியவைகளிலும் கூறப்பட்டுள்ளன. இம்முதனூலினின்றும் உருத்திரமூர்த்திகளாலும், மகரிஷிகளாலும், இருநூற்றேழு பாகமங்களும், பதினெண்சுபபுராணங்களும், பதினெண் ணுபபுராணங்களும், மூன்றிதிகாசங்களும் வழிநூலாக அருளிச்செபயப்பட்டன. ஏனை அட்டப்பிரகரணங்களும், சடங்கங்களும் பிற்காலத்துள்ள ஆப்தர்களால் சார்பு நூலாக அருளிச்செய்யப்பட்டன. இம்முதல் வழி சார்பு நூல்களினின்றே சர்வ சாஸ்திரங்களுந் தோன்றின.

இவ்வேதாகம முதலிய சகலகலைகளும் சிவபெருமானது அந்தரங்க பகிரங்க வழிபாட்டைக் கூறாநிற்கும். இவ்வழிபாடாகிய சிவபுண்ணியப்பணி ஒரு ஜென்மத்திற்கிடைப்பதன்று; அது பூர்வஜென்மங்களில் புறச்சமயநெறியினின்று கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனைநயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, முதலிய குற்றங்களினீங்கி இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தந்தை தாய் முதலிய பெரியோர்களை வழிபடுதல் முதலிய குணங்களினின்றொழுகிய புண்ணியமேலீட்டால் பிற்சென்மங்களில் அகச்சமயங்களிற்பிறந்து அந்நெறிபற்றியொழுகிய பெரும் புண்ணியத்தால் சைவசமயத்திற்றலைப்படுதல் வேண்டும்.

---

* திருவிளையாடற் புராணம் வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம் ௩௪, ௩௫,

சமயங்கள்—புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமுமென * நான்குவகைப்படும்; அவற்றுள்புறப்புறச்சமயம்-உலோகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் என அறுவகைப்படும். புறச்சமயம்—தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கிய யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும். அகப்புறச்சமயம்—பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், அயிக்கவாதம் என அறுவகைப்படும். அகச்சமயம்—பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுரவவிகாரவாதம், சிவாத்துவிதவாதம் என அறுவகைப்படும். இவையெல்லாம் அகம், புறம் என்றிரண்டா யடங்கும். இவ்வாறு இரண்டாயடக்கியும் அவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி நான்காக வகுத்துக் கூறுதலு மமையுமென்பது; தொல்காப்பியத்தில் அகம், புறம் என்றிரண்டாய் அடக்கிக் கூறிய பொருளைத் தம்முள் வேறுபாடுநோக்கி பன்னிரு படலத்தில் அகம்-அகப்புறம்; புறம்-புறப்புறம் என நான்காகப்பகுத்தோதியவாற்று னுமுணர்க.

ஈண்டுகூறிய சமயத்தாருள் புறப்புறச்சமயத்தாரறுவரும் வேதசிவாகமங்களை நிந்திக்கும் நாத்திகராயினும் ஒரு நூலென்றும் பிரமாணமென்றுங் கொண்டு நெறிக்கண்ணே நிற்றலால் அவர் சமயம் புறப்புறச்சமயமென வேறு வைத்தெண்ணப்பட்டன. புறச்சமயத்தாரறுவரும் வேதத்தைப் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும் அவருள் தார்க்கிகர் வேதத்தைச் § சுவதப்பிரமாணமென்று கொள்ளாமையோடு வேதப்

---

*இந்நாற்கூற் றறுவகைப்பேதமும் சிவஞானபாடியத்துட் காண்க.

§சுவதப்பிரமாணமென்பது—தானே பிரமாணமாவது. பரதப்பிரமாணமென்பது-ஈசுரனாற் சொல்லப்பட்டமையிற் பிரமாணமாவது.

பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும்; மீமாஞ்சகர் கருமகாண்டத்தைப் பிரமாணமெனக் கொண்டு ஞானகாண்டத்தை இகழ்தலானும்; ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும்; ஏனை மூவரும் வேதவாக்கியங்களில் தத்தம் மதத்திற்குப் பொருந்துமாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங்கொள்ளாமையானும் வேதநிந்தகர்களாகிய இவ்வறுவரையும் புறச்சமயிகளென்று வேறு வைத்தெண்ணப்பட்டன. அகப்புறச்சமயத்தாரறுவருள் பாசுபதர் முதலிய ஐவரும் வேதாகமமிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும் அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபத முதலிய உபாகமாதிகட்குச் சிறப்புவகையாற் பிரமாணங் கோடலானும் வேதாகமங்களில் ஆகாவென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும் அயிக்கவாத சைவர் வேதம் சிவாகமம் இரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றில் விதித்த வழி ஒழுகுவாராயினும் ஆணவமலத்துண்மை கொள்ளாமையோடு அதனுண்மை சாதிக்கும் சிவாகமங்களை இகழ்தலானும் இவ்வறுவரையும் அகப்புறச்சமயிகளென வேறு வைத்தெண்ணப்பட்டன. ஏனை அகச்சமயத்தாரறுவரும் பொருளுண்மையெல்லாம் சித்தாந்த சைவரோடொப்பக்கொள்ளும் அந்தரங்க உரிமையுடையராயினும் அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் இவர்சமயம் அகச்சமயமென வேறு வைத்தெண்ணப்பட்டன.

இனிப் *புண்ணியமானது பசுபுண்ணியமென்றும் பதிபுண்ணியமென்றும் இருவகைப்படும் — அவற்றுள் தண்ணீர்ப்பந்தல், சத்திரமமைத்தல் முதலிய முப்பத்திரண்டு தருமங்களைச் செய்தல் பசுபுண்ணியமெனப்படும். சரியை கிரியையாதிகள் செய்தல் பதிபுண்ணிய

---

*சிவபுண்ணியப் பாகுபாடுகளும், சரியையாதி பேதங்களும் திராவிட பாடியத்திற் கூறப்பட்டவை.

மெனப்படும். அது அபுத்திபூர்வம், புத்திபூர்வமென்று இருவகைப்படும். அவற்றுள் அபுத்திபூர்வமாவது-வேள்வி முதலியவற்றுட்போல ஏனைத்தெய்வங்களினின்று பொதுநீக்கி அறியுமாறின்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதென்றும் அந்நோக்கமுமின்றி மாவலிச்சக்கரவர்த்தி முற்பிறப்பிற்செய்ததுபோலச் செய்தவினையாதானுமோராற்றால் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதுமென இருவகைப்படும்.

இனிப் பொதுநீக்கிச் செய்வதாகிய சிவபுண்ணியமும் பொதுவென்றும் சிறப்பென்றும் இருவகைப்படும்; அவற்றுள் பொதுவாவது—சிவபுண்ணியத்துக்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் சிவபுண்ணியஞ்செய்தல்; சிறப்பாவது—அங்கமாகிய சிவதீக்ஷையுடையராய்ச் சிவபணி செய்தல்; இவையிரண்டும் பத்திகாரணமாக உண்மையாற் செய்வதும் புகழ் பொருள் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்வதுமென வெவ்வேறாக இருவகைப்படும். அச்சிறப்புச் சிவபுண்ணியமிரண்டும் சரியை, கிரியை, யோகம்அவற்றால் நிகழும் ஞானம் என ஒவ்வொன்று நன்னான்காய்விரியும். அந்நான்கினுள்ளும் சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம்; கிரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம்; யோகத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம்; ஞானத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என ஒரோவொன்று நன்னான்காய் முப்பத்திரண்டுவகைப்பட்டுவிரிவால் இன்னும் பல திறப்படும்.

அவற்றுள் திருக்கோயில் அலகிடல், மெழுகல் முதலியன சரியையிற்சரியை. இருபத்தைந்து மகேசுரமூர்த்திகள் முதலிய பரிவாரமூர்த்திகளில் ஒருவரை வழிபடல் சரியையிற் கிரியை சங்கார உருத்திரரைத் தியானித்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனையின் உறைப்பினாற்றோன்றும் அநுபவம் சரியையில் ஞானம். சிவபூசைக்கு வேண்டுவனவாகிய உபகரணங்களைச் சேகரித்தல் கிரியையிற் சரியை. பஞ்சசுத்திமுன்னாகச் சிவபூசை செய்தல் கிரியையிற் கிரியை. அந்தப்

பூசையை அகத்தே கற்பித்துச்செய்தல் கிரியையில் யோகம். இவ்விரண்டியாகத்திற்றோன்றும் அனுபவம் கிரியையில் ஞானம். இயமம் நியமம், ஆதனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரம் தாரணை என்னும் இரண்டும் யோகத்திற்கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதியோகத்தில் ஞானம் ஞானநூற்பொருளை நல்லாசிரியன் பாற்கேட்டல் ஞானத்திற்சரியை. அந்நூற்பொருளைச் சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. அதனைத் தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞானம்.

இவற்றுள் புகழ், பொருள் முதலிய உலகப்பயனை நோக்கிச்செய்யும் உபாயச் சரியையிற் சரியை முதல் உபாயஞானத்தில் ஞானமீறாகிய பதினாறு வகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப்புண்ணியங்களுக் கேற்ப காலாக்கினி உருத்திரபுவனமுதல் பிரகிருதிதத்துவ மத்தகத்தில் சீகண்டருத்திரபுவனமீறாகிய அவ்வப்புவன பதிகளுலகத்தில் சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுதலாம்.

பத்திகாரணமாக உண்மையாற் செய்யும் உண்மைச்சரியையிற் சரியை முதல் உண்மையோகத்தில் ஞானமீறாகிய பன்னிரண்டு வகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப்புண்ணியங்களுக் கேற்ப சீகண்டருத்திர புவன முதல் சுத்தவித்தியா தத்துவத்திற்குக் கீழுள்ள அவ்வப் புவனபதிகளுலகத்திற் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென்னும் பதமுத்திகளைப் பெறுதலாம்.

உண்மைஞானத்திற் சரியை கிரியை யோகங்களில் நின்றும் பலவேறுவகைப்பட்டுவிரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன் அவ்வப்புண்ணியங்களுக் கேற்ப சுத்தவித்தியாதத்துவ முதலிய அதிகாரதத்துவ போக தத்துவங்களில் வைகும் அஷ்ட வித்தியேசுரர் சப்த கோடி மகாமந்திரர் முதலிய புவனபதிகளுலகத்தில்

சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமென்னும் அபர முத்திகளைப் பெறுதலாம்.

உண்மைஞானத்தினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்தைவிட்டு ஏனை ஞானங்களுக்கெல்லாம் பயன் இலயதத்துவத்தில் பலவேறுவகைப்பட்ட சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்னும் பராபர முத்திகளைப் பெறுதலாம்.

இனி இல்லையெனத் தக்க முடிவாகிய ஞானத்திற்குப் பயன் வைதிக சைவசுத்தாத்துவித சித்தாந்த பரபோக முத்தியாகிய பரமுத்தியைப் பெறுதலாம்.

முற்கூறிய சரியை முதலியவற்றில் இயல்பாவது இயாதெனின்—அநாதி மலமுத்த பதியாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தம்மைச் சோபான முறையான் உணர்ந்துய்தற்பொருட்டு அதிசூக்குமமாகவும், சூக்குமமாகவும், தூலமாகவும்மூவகை வடிவங்கொண்டருளுவர். அவ்வடிவங்களுள் வேதாகமங்களில் விதித்தவாறு தூலத்திருமேனியாகிய சகளவடிவ மாத்திரத்தைப் பொருளெனக் கொண்டு காயத்தொழிலாகிய புறத்தொழின் மாத்திரையானே வழிபடுவது சரியை. சூக்கும வடிவாகிய சகளநிட்களத் திருமேனிமாத்திரத்தைப் பொருளெனக்கொண்டு புறத்தொழில், அகத்தொழில் என்னுமிரண்டானும் அவ்வாறு வழிபடுவது கிரியை. அதிசூக்கும் வடிவாகிய நிட்களத் திருமேனிமாத்திரத்தைப் பொருளெனக்கொண்டு அகத்தொழின் மாத்திரையானே அவ்வாறு வழிபடுவது யோகம். இவ்வாறு முறையே அநுட்டித்து வரவர நிகழும் பக்குவ முதிர்ச்சியால் உண்மையுணர்வு விளங்கி அகண்டாகார நித்த வியாபகச் சச்சிதானந்தப் பழம்பொருளிடத்தே அம்மூன்று திருமேனியையும் அம்மூன்று வழிபாட்டுத் தொழில்களையும் விட்டு அறிவுத்தொழின் மாத்திரையானே வழிபடுவது ஞானம்.

இச்சரியையாதிகளிற் றலைப்படுவதற்கு சத்திநிபாதமே இன்றியமையாத கருவியாம். இது மந்ததரம்,

மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகையாய் அவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்காய்ப் பதினறுவகைப் பட்டு விரிவாற் பல திறப்படும். இவற்றை முறையிற் பற்றியொழுகுதலே சரியையிற்சரியையாதி ஞானத்தில் ஞானமீருகிய சோபானக்கிரமமாம். இச்சத்திநிபாதம் மலபரிபாகம் எய்த எய்தப் பெற்ருலன்றிப் பெறுத லரிது. மலபரிபாகமாவது—மலம் தனது சத்தி தேய்தற் குரிய துணைக்காரணங்களோடு கூடுதலாம். இம்மலபரி பாகமும்இருவினையொப்பு எய்தப்பெற்ருலன்றிப்பெறு தலரிதாகலின் அவ்விருவினையொப்பும் ஒருதலையான் வேண்டப்படும். அவ்விருவினையொப்பாவது புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்புப் பிறத்தலேயாம்.

இச்சரியையாதிகள் § அரும்பு மலர்க் காய்கனிகள் போல ஒன்றுக்கொன்று காரணகாரியமாய் நிகழவுள் ளன. எங்ஙனம் அரும்பின்றேல் மலரும், மலரின்றேற் காயும், காயின்றேற் கனியும் இல்லையோ அங்ஙனம் சரியையின்றேற் கிரியையும், கிரியையின்றேல் யோக மும், யோகமின்றேல் ஞானமும், எய்துவதின்று. இஞ் ஞானம் தத்துவவாயிலாக ஆன்மாவின் கணிகமும் பாச ஞானத்தாலும் யானே பிரமமெனத் தரிக்குற்றெழும் பசுஞானத்தாலும் அறியப்படுமாறின்றி * "காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே" ‡ "அவனருளாலே யவன்ருள் வணங்கி" எனவும் வரும் திராவிடவேதப் பனுவற்படி பதிஞான மொன்ருனே அறியுந்தரத்தது.

இப்பதிஞானமாவது காலாக்கினியுருத்திர புவன முதல் அநாசிருத புவனமீருகிய இருநூற்றிருபத்து நான்கு புவனபோகங்களும் இதற்குமுன் அநுபவித்துக் கழித்தமையால் அவற்றைக் கான்ற சோறெனை அருவரு த்துவிட்டு மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா, புவனத்துவா என்னும்

§தாயுமானவர் பராபரக்கண்ணி,

*திருநாவுக்கரசு நாயனர் தேவாரம். ‡ திருவாசகம்,

அறுவகையத்துவாவுட்பட்ட அசுத்தப்பிரபஞ்சம், சுத்தாசுத்தப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் மூவகைக் காரியப்பிரபஞ்சமும் காரணரூபத்தில் சிறிதும் காணப்படாமையால் அவற்றை † "இந்திரசாலங் கனவுகானலினீர்" என முழுப்பொய்யெனக்கண்டு அவ்வாறு கண்ட காட்சி சலியாதிருக்கப்பெறின் அப்பிரபஞ்சத்திற்கு விலக்ஷணமான ஞானசொரூபம் ஆண்டினிது விளங்கித் தோன்றும். அது தோன்றவே அதன்கட்பெருங் காதல்மீதூரும் அது மீதூரவே அவ்வன்பின்வழித்தாய்ப் பேரின்பமாய் ஆன்மவறிவின்கண்ணே விளங்கித் தோன்றும். அந்த ஞானத்திற்கு முதலாகிய ஞேயப் பொருள்.

அஞ்ஞேயத்தை கண்ட காட்சி சலியாததீதப்படுதலே நிட்டையெனப்படும். அக்காட்சி ஒரோவழி வாதனைவயத்தால் பெரும்பான்மையுஞ் சலிக்கப்பெறுதல் இயல்பேயாம். அங்ஙனஞ் சலியாதிருத்தற்பொருட்டு ஒரு தலையான் வேண்டப்படுவது சிவோகம்பாவனையும், திருவஞ்செழுத்து மந்திரமும், அந்தரியாகக்கிரியையுமாம். அவற்றுள் சிவோகம்பாவனையாவது—உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாக அறிகின்ற ஆன்மாவானது சுட்டுணர்வுட்பட்ட அப்பாசமுமன்று; சுட்டுணர்விறந்து நின்ற அப்பதிப்பொருளுமன்று; இரண்டிற்கும் வேறெனக்கண்டு ஏனைப் பதிப்பொருள் வேறாயினும் கண்ணொளியும் கதிரொளியும்போல வியாப்பிய வியாபக பாவத்தால் வேற்றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றல். அஞ்செழுத்து மந்திரமாவது—அங்ஙனம் சிவமும் ஆன்மாவும் உடையானும் உடைமையுமாய் நிற்கும் பரிசை அஞ்செழுத்தைக் கணிக்குமுறைமையின் வைத்துச் சிகர வகர யகரங்கள் முறையே தற்பதப்பொருளும் தொம்பதப்பொருளும் அசிபதப் பொருளுமாமுறைமைநோக்கித் தன்னறிவு அதன் வயத்தாம்படியுறைத்துநிற்றல். அந்தரியாகமாவது—இதயம், உந்தி, புருவநடு என்னும் இவற்றை முறையே பூசைத்தானம்,

ஓமத்தானம், தியானத்தானமாகக் கருதிக்கொண்டு அம்முதல்வனை ஐம்பொறியடக்கல் கொல்லாமை, பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அத்திருமந்திரத்தாலர்ச்சித்தலாம். இங்ஙனம் அந்தரியாக முதலிய மூன்றனும் ஒருவழிப்படநின்றுகொண்டு அவ்வஞ்செழுத்தை ஆசிரியனறிவுறுத்த * ஒருமொழிப்படி நெஞ்சழுத்திக்கணித்தல் செய்யற்பாற்று இக்கருத்துப்பற்றியன்றே ஞானசாதனங் கூறும் ஒன்பதாஞ் சூத்திரத்துள் "தியாயேயத்" தென்று கோஷித்து நின்றது வடமொழிச் சிவஞானபோதம். இங்ஙனம் அவனே தானேயாகிய வந்நெறி ஏகனாகி யிறைபணி நின்று அயராவன்புசெய்து அரன் கழலைத் தலைப்பட்டுக் கடைப்பிடிப்பதே வேதாகமங்களின் முடிபெனக் கூறுவர் பெரியார்.

இவ்வயராத அன்புசெய்து அரன் கழலடைந்த அன்பர்க்குச் சீவன் முத்தி நிலைக்கண் தேகம் நிற்குமளவும் பிராரத்வ வினை அத்தேகத்தைப் பற்றி நிற்றலான் அஃது அவருக்கு ஓரோவழி வாசனை வயத்தால் குலாலன் வினை தவிரவும் சக்கரஞ் சுழலுமாறுபோல வந்து தாக்கும்; தாக்கவே அது சார்பாக விருப்பு, வெறுப்புக்கள் நிகழாநிற்கும். நிகழவே பார்த்தவிடமெல்லாம் பரமே பார்த்திருப்பார்க்குப் பாராதி பூதகாரியவிடயப் பொருள்கள் காட்சிப்படும். படவே அவற்றைச் சுட்டி யுணர்வதாகிய விபரீத வுணர்வு மேம்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தும். இங்ஙனம் கீழ்ப்படுத்த எழும் ஆன்மஞானசத்தியை முற்கூறியபடி மும்மலங்களைக் களையும். நிட்டையிலும் ஆன்ம இச்சா சத்தியை அந்நிட்டையை நிலைபெறுத்துவதாய பத்தியினால் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தை யணைந்த சிவபக்தர்களோ டிணங்குவதிலும் ஆன்ம கிரியா சத்தி

---

§ தாயுமானவர் "ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கும்" என்னும் பாசுரத்தா லிதன் பெருமை யுணரப்படும்.

யை அம்மருவுதலை நிலைபெறுத்துவதாய அப்பத்தரது திருவேடத்தையும், சிவாலயத்தையுஞ், சிவனெனவே தேறி வழிபடுதலிலும் செலுத்தி நிற்றல் ஒருதலையா மென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கட னடியேனையுந் தாங்குத
லென்கடன் பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

எட்வர்ட் பிரஸ்—திருவாரூர்.